## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. O.S.No. 239/2024.

Prosecution witness for P.W.2.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. பொன்செல்வி. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026.

முதல் விசாரணை

நான் தற்போது எட்டையபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்டல துணை வட்டாட்சியராக பணியில் இருந்து வருகிறேன். சாட்சி சொல்ல அழைப்பாணை வந்தது. மேலஈரால் கிராம நில உடைமை மேம்பாட்டு திட்டத்திற்கு முந்தைய செட்டில்மெண்ட் 'அ' பதிவேடு கொண்டு வந்துள்ளேன். அந்த பதிவேட்டில் புல எண் 176/3 தி. கோவிந்தசாமி நாயக்கர் பெயரில் உள்ளது. மேற்படி செட்டில்மெண்ட் அ பதிவேட்டின் அலுவலக நகல் **சா.சா.ஆ 1**.

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேலஈரால் கிராமம் புல எண் 257/41 சம்பந்தப்பட்ட சிட்டா. அந்த சிட்டா திருவடிசாமி மனைவி சீதாலெட்சுமி என்பவர் பெயரில் உள்ளது. அந்த சிட்டா **பி.சா.ஆ 1**. அதில் 258/14 மற்றும் 264/17 பி ஆகிய இரண்டு புல எண்களும் சேர்ந்து உள்ளன. அந்த இரண்டு புல எண்களும் மேற்படி சீதாலெட்சுமி பெயரில் உள்ளன. என்னிடம் காட்டப்படும் ஆவணம் அதே புல எண்கள் சம்பந்தப்பட்ட சிட்டா. அது **பி.சா.ஆ 2**. இந்த சிட்டா நாகவ நாயக்கர் மகன் திருவடிச்சாமி பெயரில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் அதே புல எண்கள் குறித்த மனைவரி தோராயப்பட்டா. அது **பி.சா.ஆ 3**. அந்த ஆவணம் அக்காநாயக்கர் மகன் நாகவ நாயக்கர் பெயரில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேலஈரால்

கிராமம் அதே புல எண்களுக்கு வழங்கப்பட்ட நத்தம் நிலவரி திட்ட துாய அடங்கல் பதிவேடு நகல் அது **பி.சா.ஆ 4**. அந்த ஆவணம் நாகவ நாயக்கர் மகன் திருவடிச்சாமி பெயரில் உள்ளது. மேற்படி ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் இருந்துதான் வழங்கப்பட்டுள்ளன. உரிமையை காட்டக்கூடிய ஆவணங்கள் இருந்தால் பட்டா வழங்கப்படும். வாய்மொழி பாகம் ஏற்பட்டால் அனுபவத்தின் அடிப்படையில் பட்டா வழங்கப்படும் என்றால் சரியல்ல. ஒருவர் இறந்துவிட்டால் அவரது வாரிசுகள் பெயரில் கூட்டுப்பட்டா வழங்குவோம். நத்தம் சொத்து என்பது வீட்டு மனை பட்டா வழங்குவதற்காக உள்ள நிலமாகும். நத்தம் நிலத்தில் ஒருவர் ஆக்கிரமிப்பு செய்து வீடுகட்டினால் அனுபவத்தின் அடிப்படையில் பட்டா வழங்கப்படும் என்றால் சரிதான். ஆனால் குறைந்தபட்சம் ஐந்து வருடம் அனுபவம் செய்திருக்க வேண்டும். நத்தம் நிலம் அரசுக்கு சொந்தமானதல்ல என்றால் சரியல்ல. பி.சா.ஆ 1 முதல் 4 ஆவணங்கள் அடிப்படையில் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள்தான் அந்த சொத்துக்களின் உரிமையாளர்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நில உடைமை மேம்பாட்டு திட்டத்தில் வழங்கப்பட்ட பட்டா பாஸ்புத்தம் என்றால் சரிதான். அது **பி.சா.ஆ 5**. அதில் புல எண் 176/3 நாகவ நாயக்கர் மகன் இராமானுஜம் பெயரில் வழங்கப்பட்டுள்ளது. அதனால் புல எண் 176/3 பி.சா.ஆ 5ன் படி மேற்படி இராமானுஜத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பி.சா.ஆ 5 1984ல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி புல எண்களை நான் நேரில் பார்க்கவில்லை. அந்த சொத்துக்கள் அந்த பட்டாதாரர்கள் அனுபவத்தில் உள்ளன என்றால் சரிதான்.

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.03.16 18:53:25 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.